**உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முதலீட்டு செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறின் தொகுப்பு ஏற்பாடு - 2023 யூலை 31 இல் முடிவடைந்த ஏழு மாதங்களுக்கான**

---

உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முதலீட்டு செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறின் தொகுப்பு ஏற்பாட்டின் 2023 யூலை 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 6371 எல்கே, 6228 எல்கே, 8878 எல்கே மற்றும் 6346 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. சுகாதாரம், சமூக பாதுகாப்பு, விவசாயம், கல்வி மற்றும் போக்குவரத்துத் துறைகளை உள்ளடக்கி குறுகிய மற்றும் நடுத்தர கால தலையீடுகளுடன் கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் அரசாங்க பதிலளிப்பு மற்றும் மீட்புத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கும் ICT தீர்வுகளைப் பயன்படுத்தி தொலைதூரத்தில் பொது சேவைகளை வழங்குவதற்கும் ஒரு தனியான அவசரகால செயல்நடவடிக்கைத் திட்டத்தைப் பயன்படுத்தி திறமையான மற்றும் ஒருங்கிணைந்த பதிலளிப்பை உறுதிப்படுத்துவதற்காக, கூட்டு இணை-நிதியளிப்பு அடிப்படையில் தனியான CERC தொகுப்புக் கணக்கில் மேலே கூறப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் தொகுதி நிதிகளின் CERC ஐ செயற்படுத்துதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,491 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 56 மில்லியனானதுடன் அது ஆசிய அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 யூன் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 யூலை 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதிக்கான நிதிகளின் பயன்பாட்டுக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயம் | | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (1)(i) | நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிறுவனங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளை அமுல்ப்படுத்தியிருக்கவில்லை. 2023 யூலை 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறுள்ளது. | | | | |
| | **இல.** | **செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக இலக்குகள்** | **அடைந்து கொள்ளல்கள்** | | |
| | (அ) | வயல் பயிர்களுக்காக 102 களஞ்சியங்களின் நிர்மாணம் மற்றும் எடை இயந்திரங்கள் மற்றும் 102 ஏணிகளை வழங்குதல் | 61 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 32 செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 7 செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்டன.<br>2 செயற்திட்டங்கள் முழுமையடையவில்லை.<br>66 ஏணிகள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் எடை இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | (i) குறிப்பிடப்பட்ட அடைந்து கொள்ளலுடன் இணங்கப்படுகிறது.<br><br>இந்த செயற்திட்டத்தின் கீழ் உள்ள 32 களஞ்சியங்கள் பல்வேறு காரணங்களால் செயற்திட்டத்தின் ஆரம்ப நிலையிலேயே (தொடங்காமல்) இரத்து செய்ய வேண்டியிருந்தது்<br><br>அதன் பிரகாரம் 32 களஞ்சியசாலைகள் இரத்துச் செய்யப்பட வேண்டியிருந்ததுடன் 07 ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களால் எதிர்கொள்ளப்பட்ட நிச்சமற்ற நிலைமைக்கு நிதி வழங்கும் முகவரிடம் இருந்து பொருத்தமான தீர்வு கிடைக்காததால் நிர்மாணப் பணிகள் | அனைத்து இலக்குகளையும் குறித்துரைத்தவாறு அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பது அவசியமாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இடைநடுவில் நிறுத்தப்பட வேண்டியிருந்தது. பின்வரும் காரணங்களால் எடை இயந்திரங்களை கொள்வனவு செய்ய முடியாதிருந்தது.<br><br>இந்த ஒன்று உட்பட அனைத்து கட்டப்பட்ட களஞ்சியங்களுக்கும் ஏணி மற்றும் எடை இயந்திரங்களை வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்டு அதன் பிரகாரம் ஒவ்வொரு களஞ்சியத்திற்கும் ஏணி வழங்கப்பட்டது. எடை இயந்திரத்தை வழங்குவதற்கு தகுந்த வழங்குநரை தெரிவு செய்வதற்கு இரண்டு முறை பெறுகை செயன்முறை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரசாங்கம் விதித்துள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளால் உள்நாட்டிலோ, இறக்குமதி செய்தோ எடை இயந்திரங்களை வழங்குவதற்கான வழங்குநரை கண்டுபிடிக்க முடியவில்லை. | |
| (ஆ) | 486 பாடசாலைகளுக்கு தண்ணீர் விநியோகம் | 319 பாடசாலைகளுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | ஆசிரியர்களின் திறன் மேம்பாடு | இன்னும் அமுல்ப்படுத்தப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஈ) | 881 தேவைப்படும் பாடசாலைகளுக்காக சுகாதார வசதிகள் | 867 பாடசாலைகளில் சுகாதார வசதிகளின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (உ) | 12 புகையிரத நிலையங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் | 5 புகையிரத நிலையங்களில் 5 கழிவறை அலகுகளின் நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 21 SLTB டிப்போக்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் | 16 ஆண் மற்றும் பெண் கழிப்பறைகளின் நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |